**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXV of Bharatiya Nagarik Suraksha Sanhita)**

**IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, MADATHUKULAM**

| | |
|---|---|
| STC No. | : 171/2021 |
| Name | : Ganesan |
| P.W. | : 6 |
| Father Name | : |
| Village | : |
| Taluk | : Madathukulam |
| Occupation | : |
| Age | : /2026 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of

**06.02.2026**

**எதிரி நீதிமன்றத்தில் ஆஜரில்லை 355 BNSS ன் படி மனு தாக்கல் செய்து மனு அனுமதிக்கப்பட்டது.**

**முதல் விசாரணை**

நான் தற்போது உடுமலையில் பிரணவ் ஆர்த்தோ கேர் என்ற மருத்துவமனை வைத்துள்ளேன். கடந்த 15.09.2019 ம் தேதி மாலை 05.30 மணி அளவில் எங்கள் மருத்துவமனைக்கு தண்டபாணி என்பவர் 15.09.2019 ம் தேதி மாலை 04.30 மணிக்கு மடத்துக்குளம் இந்தியன் பெட்ரோல் பங்க் அருகில் நான்கு சக்கர வாகனமும், இருசக்கர வாகனமும் சாலை விபத்தில் அடிபட்டு என்னிடம் சிகிச்சைக்கு வந்தார். அவரை பரிசோதித்ததில் அவருக்கு கீழ்க்கண்ட காயங்கள் காணப்பட்டது.

1. இடது காலில் வீக்கமும் வலியும் இருந்தது

2. சிராய்ப்பு காயம் இடது தோள் பட்டை, இடது முழங்கால், இடது கணுக்கால் மற்றும் வலது முட்டியில் காணப்பட்டது

அவருக்கு ஊடுகதிர் படம் எடுக்கப்பட்டதில் அவருக்கு இடது காலில் எலும்பு முறிவு இருந்தது. அவருக்கு ஏற்பட்ட காயம் கொடுங்காயம் என்று சான்று வழங்கினேன். **17.10.2019 தேதியிட்ட காயச் சான்று அ.சா.ஆ.7 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** இது

சம்மந்தமாக போலீசார் என்னை விசாரணை செய்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

(1) காயச் சான்றிதழில் இரண்டு இருசக்கர வாகனங்கள் மோதி விபத்து ஏற்பட்டதாக காயம்பட்டவர் சொன்னதாக பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். இருசக்கர வாகனத்தில் வேகமாக சென்று தானாக கீழே விழுந்தால் இந்த காயங்கள் ஏற்பட வாய்ப்புள்ளதா என்றால் வாய்ப்புள்ளது.

மறு விசாரணை இல்லை.

இன்று திறந்த நீதிமன்றத்தில் என் முன்பாக சாட்சி விசாரிக்கப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சியால் படித்து பார்க்கப்பட்டு சரி என்றும் என் முன்பு கையெழுத்து செய்தும் ஒப்புக் கொள்ளப்பட்டுள்ளது..

DHEENADHAYALAN M

Digitally signed by DHEENADHAYALAN M
Date: 2026.02.06 18:04:05 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்
மடத்துக்குளம்